புதுச்சேரி அரசு

# மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்

## செய்திக்குறிப்பு

காரைக்கால்,

மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் 07 ஆம் தேதி அன்று தொடங்கி ஏப்ரல் 16 ஆம் தேதி வரை நடைபெறுகின்றன. இத்தேர்வினை மொத்தம் 2399 பேர் இத்தேர்வினை எழுதுகின்றனர்.

இத்தேர்வினை காரைக்காலில் உள்ள 10 அரசு மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 1552 மாணவ மாணவியரும், 13 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 844 மாணவ மாணவியரும் ஆக மொத்தம் 23 பள்ளிகளைச் சேர்ந்த 2396 மாணவ மாணவியர் எழுதுகின்றனர். இதில் 1077 பேர் ஆண்கள், 1319 பேர் பெண்கள்.

இது தவிர காரைக்கால் அன்னை தெரெசா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 3 ஆண் தனித்தேர்வர்கள் (Private Candidates) இத்தேர்வினை எழுதுகிறார்கள். இதில்

இவர்கள் தேர்வு எழுத,

1. அன்னை தெரசா அரசு மேல்நிலைப்பள்ளி, காரைக்கால்.
2. நிர்மலாராணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காரைக்கால்.
3. அரசு மேல்நிலைப்பள்ளி, திருபட்டினம்.
4. வ.உ.சி. அரசு மேல்நிலைப்பள்ளி, கோட்டுச்சேரி.
5. ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலைப்பள்ளி, நெடுங்காடு.
6. தந்தை பெரியார் அரசு மேல்நிலைப்பள்ளி, கோவில்பத்து.
7. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருநள்ளார்
8. அரசு மேல்நிலைப்பள்ளி, தேனூர், திருநள்ளார்.

ஆகிய 8 பள்ளிகளில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த 08 தேர்வு மையங்களுக்கென 08 முதன்மைக் கண்காணிப்பாளர்களும் (Chief Superintendent), 08 துறை அலுவலர்களும் (Departmental Officer) 175 தேர்வுகூட மேற்பார்வையாளர்களும் (Assistant Superintendent) நியமிக்கப்பட்டுள்ளனர்.

காரைக்கால் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி தேர்வர்கள் (Disabled Candidates) 4 பேர் பள்ளி தேர்வர்களாகவும், 1 நபர் தனித்தேர்வராகவும் ஆகமொத்தம் 5 பேர் தேர்வெழுதுகின்றனர். இவர்களில் 4 பேர் ஒரு மணிநேரம் கூடுதல் நேரச் சலுகையும், பார்வையற்ற ஒரு ஆண் பள்ளித்தேர்வருக்கு சொல்வதை எழுதுபவர் (Scriber) நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களில் தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒரு தேர்வரும், அன்னை தெரசா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இரண்டு (2) தேர்வர்களும் மற்றும் நெடுங்காடு ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலைப் பள்ளியில் இரண்டு (2) தேர்வர்களும் தேர்வெழுதுகின்றனர்.

தேர்வுகள் நடைபெறும்போது முறைகேடுகள் எதுவும் நிகழாவண்ணம் கண்காணிக்க ஒவ்வொரு தேர்வு மையத்திலும் இரண்டு பேர் கொண்ட ஒரு நிலைப்படைக் குழுவினர் (Standing Squad) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எந்நேரமும் தேர்வு மையத்தைக் கண்காணித்தபடியே இருப்பர். மேலும் தேர்வு மையங்களை திடீர் சோதனையிட காரைக்கால் முதன்மைக்கல்வி அலுவலர் தலைமையில் 4 பேர்கொண்ட இரண்டு பறக்கும்படை (Flying Squad) அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர காரைக்கால் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 2 பேர் கொண்ட பறக்கும்படையும், அதிமுக்கியத்துவம் வாய்ந்த பாடங்களுக்கான தேர்வுகள் நடைபெறும்பொழுது தேர்வு மையங்களை சோதனையிட சென்னை அரசு தேர்வுகள் இயக்ககம் நியமித்துள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பினர்களைக் கொண்ட 1 பறக்கும்படையும் அமைக்கப்பட்டுள்ளது.

தேர்வெழுதும் மாணவ மாணவியர் கண்டிப்பாக எவ்வித ஒழுங்கீனச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது அவ்வாறு யாரேனும் கண்டறியப்பட்டால் அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இடம் : காரைக்கால்
நாள் : 6/3/18

( R. கேசவன் )
மாவட்ட ஆட்சியர்
காரைக்கால்

பெறுநர் :

காரை மாவட்ட அனைத்து பத்திரிக்கையாளர்கள், ஊடகவியலாளர்கள்.